சுற்று நிருப இலக்கம் : 01/2023

**எனது இலக்கம்: WPCEC/MA1/** சுற்று நிருபம்
கூட்டுறவு தொழிலாளர் ஆணைக்குழு (மே.மா)
இலக்கம் 628, ஜனஜயசிடடி கட்டிடம்
8ஆம் மாடி, நாவல வீதி
இராஜகிரிய.

மேல் மாகாணத்தின் சகல பல நோக்கு சேவைகள் கூட்டுறவுறவுச் சங்கம், மாவட்ட கிராம வங்கி, சணச சங்கம் , கூட்டுறவுச் சபைகள் மற்றும் , கூட்டுறவுச் சங்கங்கள் / சபைகளின் தலைவர்களுக்கு ,

**கூட்டுறவு அலுவலர்களுக்கான 2023 ஆம் ஆண்டின் விடுமுறைகள்**

கூட்டுறவு அலுவலர் ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிக் கோவைகளுக்கு ஏற்ப கூட்டுறவுச் அலுவலர்களுக்கு உரித்தான பொது விடுமுறைகள் தொடர்பிலான தடைகள் மற்றும் அலுவலக அலுவலர் கூட்டத்தின் கீழ் கௌரவ தொழில் அமைச்சரால் அறிவித்தல்களுக்கு உட்படுத்தப்பட்ட திகதிகளாகும் இதற்கேற்ப கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் கூட்டுறவுச் அலுவலர்களுக்கான வீடுமுறை திகதிகளாக ஆணைக்குழுவின் கட்டளையின் படி அறிவிக்கப்படுகின்றன.

- சுனவரி - 15 தமிழ் தைப்பொங்கல் தினம்
- பெப்ரவரி - 04 தேசிய சுதந்திர தினம்
- ஏப்ரல் - 13 சிங்கள மற்றும் தமிழ் புது வருடத்திற்கு முன்னைய தினம்
- ஏப்ரல் - 14 சிங்கள மற்றும் தமிழ் புது வருட தினம்
- மே - 01 உலக தொழிலாளர் தினம்
- செப்டம்பர் - 28 (மீலாதுன் நபி) நபிகள் நாயகத்தின் பிறந்த தினம்
- டிசம்பர் - 25 நத்தார் தினம்

02. மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளுக்கு மேலதிகமாக“கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கூட்டுறவாளர்களின் தினம்” ஆக பிரகடணப்படுத்தப்படும் திகதியும் அரசாங்கத்தால் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு “அரச விடுமுறை” திகதிகளாக பிரகடணப்படுத்தப்படும் திகதிகளும் சகல பூரண திகதிகளும் விடுமுறை திணங்களாக வழங்கப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக தமது அலுவலர்கள் விடுமுறை வழங்குமாறு விண்ணப்பித்தால் அதற்கமைய சந்தர்ப்பங்களில் கூட்டுறவு சங்கங்களின் பணிப்பாளர் சபையின் தீர்மாணத்தின் படி தமது அலுவலர்களுக்கு விடுமுறைகளை அங்கீகரித்தல் தொடர்பில் தீர்மானிக்க இயலும்.

03. 2023ஆம் ஆண்டுக்கான சிங்கள / தமிழ் புதுவருடத்திற்கு முன்னரான தினங்கள் விடுமுறை தினங்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதனால் நுகர்வோரின் வசதிகளுக்காக ஏதேனும் ஒரு சங்கம் விரும்பினால் சங்க காரியாலயம் அல்லது பிரதேசம் இந்த தினங்களில் ஒரு தினத்தில் அல்லது இரு தினங்களிலும் திறந்து வைப்பதற்கும் அந்தத் தினங்களில் கடமை ஆற்றுவதற்காக அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குவதற்கும் ஆணைக்குழுவின் அங்கீகாரம் கிடைக்கும். அவ்வாறு அமுலாக்கல் கிடைக்கும் போது மேற்குறிப்பிடப்பட்டவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட அலுவலர்களுக்கு அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தினங்களுக்கு சமமான தினங்கள் முழுமையான சம்பளத்துடன் கூடிய அடுத்தவரும் 30 தினங்களுக்குள் விடுமுறை வழங்குதல் வேண்டும். இவ்வாறு சங்கக் காரியாலயங்கள், பிரதேச சங்கங்கள் திறந்து வைக்கப்படும் சந்தர்ப்பங்களில் கடமையில் ஈடுபடுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட மொத்த பணியாளர்களுக்குமாக இருந்த போதிலும், அதில் ஒரு பகுதியாக இருந்த போதிலும் தாமதம் இன்றி அது பற்றி ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடல் வேண்டும்.

04. மேற்குறிப்பிடப்பட்ட விடுமுறை தினங்களில் எதுவும் சங்கத்தினால் வாராந்தம் வழங்கப்படும் விடுமுறைகள் 1 ½ க்கு உட்பட்டதாக இருப்பின் அதற்காக முறையே அரை தினம் ஒன்றை அல்லது முழுமையான தினம் ஒன்றை அடுத்த வரும் 30 தினங்களுக்குள் விடுமுறையாக வழங்குதல் வேண்டும். இதற்கு மாற்று வழி முறையாக இரு தரப்பினரதும் இணக்கப்பாட்டிற்கு அமைய அதறகாக அரை தினத்தை அல்லது ஒரு தினத்திற்கு உரிய சம்பளத்தை அல்லது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப கொடுப்பனவுகளை மேற் கொள்ள இயலும்.

ஆணைக்குழுவின் கட்டளையின் படி
கையொப்பம் தெளிவில்லை
எல்.பீ மனோஜா எஸ் பத்திரண
செயலாளர் (பதில்)
கூட்டுறவு அலுவலர் ஆணைக்குழு
மேல் மாகாணம்

பிரதிகள் : 01. செயலாளர் வீதிப் போக்குவரரத்து, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு (மேல் மாகாணம்) – தயவான அவதானத்திற்கு
02. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் சங்கப் பதிவாளர் (மேல் மாகாணம்) – தயவான அவதானத்திற்கு